# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

நான்காம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2021

FWC

நாடகமும் அரங்கியலும் I

Drama & Theater I

Three Hours

Gr -13 (2021)

58 | T | I

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

01. “கலை மெய்ப்பொருளின் முற்றத்தில் இருந்து துய்ப்போரை கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலை கடந்து நிற்கும் காட்சியினை புலப்படுத்தி நிற்கும்” எனக் கூறிய மேலைத்தேயக் கோட்பாட்டாளர்?
    1) குரேசே 2) கோல்ரிட்சு செல்லிக்கு 3) பியேட்ஸ்லி
    4) வில்லியம் வேட்ஸ் வேத் 5) எரிக் நியூட்டன்

02. பின்வரும் கூற்றுக்களில் மேலைத்தேயக் கலைக் கோட்பாடுகளுடன் பொருந்தாத கோட்பாடு.
    1) புலக்காட்சிப் பொருளாக கலை காணப்படும்
    2) கலை மனித உணர்வுகளின் வெளிப்பாடு
    3) கலை தூய உள்ளுணர்வின் வெளிப்பாடு
    4) கலையின் உட்பொருளும் தத்துவமும் சமயமாகும்.
    5) கலை அழகியல் இன்பம் பயப்பது

03. அகன்ற திரையில் இருட் சூழலுக்குள் பார்ப்போரை இருத்தி அசையும் காட்சிகளால் கதை சொல்லுகின்ற கலை.
    1) நாடகம் 2) வானொலி நாடகம் 3) சினிமா
    4) தொலைக்காட்சி நாடகம் 5) நடனம்

04. பின்வருவனவற்றில் படைப்பாளியின் உடன் துணையின்றி நயக்க முடியாத கலை வடிவம்.
    1) ஓவியம் 2) நடனம் 3) சிற்பம் 4) சினிமா 5) கட்டடம்

05. சிங்கள மக்களால் ‘நூர்த்தி’ என அழைக்கப்படும் நாடக வடிவம் தமிழில் வழங்கப்படுகின்ற பின்வரும் வடிவத்துடன் தொடர்புபட்டதாகும்.
    1) கூத்து 2) விலாசம் 3) இசைநாடகம்
    4) பறைமேளக்கூத்து 5) ஒயிலாட்டம்

06. மேல் வருவனவற்றில் ‘பலே’ பற்றிய சரியான கூற்று
    1) 19ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றியது
    2) நாட்டிய நாடகம் எனவும் இதனை அழைப்பர்
    3) இசைக்கேற்ப உடலை பலவாறு பயன்படுத்தி ஆடுவதாகும்
    4) நடிகர் இசையில் தேர்ந்தவராகக் காணப்படுவார்.
    5) குறியீட்டுப்பாங்கான கைபொருட்கள் பயன்படுத்தப்படும்



agaram.lk

07. நாடகம் என்ற சொல்லுக்கு 'கதை தழுவி வரும் கூத்து' எனக் கூறியவர்.

1) கா. சிவத்தம்பி 2) அடியார்க்கு நல்லார் 3) சு.வித்தியானந்தன்
4) தொல்காப்பியர் 5) இராமானுஜம்

08. 'ருக்மணி அருண்டேல்' தொடர்புபடுகின்ற கலை வடிவம்

1) நடனம் 2) இசை 3) நாடகம்
4) இலக்கியம் 5) ஓவியம்

09. ஜேர்மனிய அறிஞரான ஸ்லீகல் என்பவர் 'உறைந்து போன இசைக்கலை' என விபரிக்கும் கலை வடிவம்.

1) கட்டடம் 2) ஓவியம் 3) சிற்பம்
4) நாடகம் 5) நடனம்

10. தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான பண்புகளில் ஒன்று,

1) கேட்டலின் மூலம் நுகரப்படும் 2) குரல் வெளிப்பாட்டை கொண்டது
3) பார்ப்போரின் உடனடி துலங்கலைக் கொண்டது 4) யதார்த்த நாடகமாக இருக்கும்
5) கமராவை ஊடகமாக கொண்டிருக்கும்

11. அரங்கின் 'கேட்பியங்களாக' கொள்ளப்படக்கூடியவை

1) வேட உடை, ஒப்பனை 2) காட்சிவிதானம், அரங்கவெளி 3) ஒளி, வெளி
4) இசை, ஒலி 5) இசை, ஒளி

12. 'அரங்கு' பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று

1) அரங்கு ஓர் அழகியல் வெளி
2) நிகழ்த்துகையுடன் தொடர்புடைய விடயங்களை இணைப்பது
3) பார்க்கும் இடம்
4) அரங்கு செயல்களின் தொகுதி
5) ஆற்றுகை, ஆற்றுவோர், பார்ப்போர் இணையும் தொகுதி

13. "நடிப்புச்" செயற்பாட்டிற்கு சடங்குக் கூறுகளை இணைத்த நாடக நெறியாளர்.

1) ஸ்ரனிஸ்லவஸ்கி 2) மேயர்ஹோல்ட் 3) பெற்றோல்ட் பிரக்ட்
4) அகஸ்தோபோல் 5) குறொட்டோவ்ஸ்கி

14. நாடக இலக்கியம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக?

அ) கதை சொல்லப்படுதல்
ஆ) பாத்திரங்கள் இடம்பெறுதல்
இ) பாத்திரங்களுக்கிடையேயான உரையாடல் காணப்படல்
ஈ) வாசிப்பதற்காக எழுதப்படுதல்
உ) கதைப்பின்னல், முரண் என்பன காணப்படுதல்

மேற்குறிப்பிட்டவற்றுள் நாடகம், சிறுகதை ஆகிய வடிவங்களுக்கு பொருந்தி வருகின்ற கூற்றுக்கள்.

1) அ, ஆ, உ 2) அ, இ, ஈ 3) அ, ஆ, ஈ
4) ஆ, ஈ, உ 5) அ, ஆ, இ

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

15. கிரேக்க 'ரஜடியில்' நடிகர்கள் தொகை படிப்படியாக அதிகரித்தமைக்கான மிகப் பொருத்தமான காரணமாக கருதப்படக்கூடியது,
   1) பார்ப்போர் தொகை படிப்படியாக அதிகரித்தமை
   2) நாடக ஆசிரியர்களிடம் இருந்த போட்டிமனப்பான்மை
   3) முரண்பாடுகள் தோன்றி வலுப்பெற தனிமனிதப் பிரச்சினைகள் மேலோங்கியமை
   4) நடிகர்களுக்கான ஊதிபத்தினை அரசு அதிகரித்தமை
   5) நாடகப்போட்டிகள் விரிவாக்கம் பெற்றமை.

16. கிரேக்க அரங்கப் பாரம்பரியத்தில் 'மரணம் மேடையில் காட்டப்படுவதில்லை' என்பர். இப்பாரம் பரியத்திற்கு உதவுவதற்காக கிரேக்க அரங்கில் பயன்படுத்தப்பட்டது.
   1) 'ஸ்கெனே' காட்சிக்கட்டடம்
   2) வர்ணம் தீட்டப்பெற்ற திரைகள்
   3) அமரர் ஊர்தி (Ekkyklema)
   4) வானோர்வரு கருவி (Due Ex machinge)
   5) முக்கோணக் குறியீடு (Periaktoi)

17. பின்வரும் நாடகங்களில் 'சோபோகிளிஸ்' எழுதிய நாடகங்கள்
   1) அகமெம்னன், தீபிசிற்கு எதிரான எழுவர்
   2) எலெக்ரா, த பேர்சியன்ஸ்
   3) த சோபோறி, அகமெம்னன்
   4) ஹெலன், மீடியா
   5) எலெக்ரா, அஜாக்ஸ்

18. மேல்வரும் நாடகக் கட்டமைப்பு தொடர்பான விடயங்களைக் கருதுக.
   அ) பாயிரம்
   ஆ) முன்னோக்கிச் செல்லல்
   இ) முரண்
   ஈ) இசைப்பா முகாரி
   உ) செய்தியாளன்

   மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் 'திறஜெடி' நாடகக் கட்டமைப்புடன் தொடர்புடைய தொகுதி
   1) அ, ஆ, இ
   2) அ, இ, ஈ
   3) ஆ, இ, ஈ
   4) அ, ஈ, உ
   5) இ, ஈ, உ

19. பின்வருவோரில் 'ஸ்பானிய' நாடக மரபில் தனது நாடகங்களால் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய நாடக ஆசிரியர்
   1) ஷில்லர்
   2) லோப்போ டிவேக்கா
   3) கத்தே
   4) அலெக்சாண்டர் டுமாஸ்
   5) விக்டர் குகோ

20. பின்வரும் கூற்றுக்களில் இயற்பண்பு வாதத்தின் தோற்றத்துக்கு காரணமாக கூறமுடியாதது,
   1) கைத்தொழில் புரட்சியின் விளைவுகள்
   2) நகரமயமாக்கம்
   3) கடவுள் முதன்மை வாதக்கொள்கை
   4) நெப்போலியனின் வீழ்ச்சி
   5) டார்வினின் கூர்ப்புக் கொள்கை

21. 'காவிய அரங்கினை' தோற்றுவித்தவர்
   1) பெற்றோல்ட் பிரக்ட்
   2) பீற்றர் புறூக்
   3) மேயஹோல்ட்
   4) குறொட்டோவ்ஸ்கி
   5) ஏர்வின் பிஸ்காட்டர்

22. வடமொழி அரங்கில் 'சுதாபன' என்னும் உரையாடல் பகுதி இடம்பெறுவது
   1) சூத்திரதாரிக்கும் துணை நடிகருக்கும்
   2) நாயகனுக்கும் நாயகிக்கும்
   3) சூத்திரதாரிக்கும் நாயகனுக்கும்
   4) கதாநாயகனுக்கும் துணை நடிகருக்கும்
   5) இரு துணை நடிகருக்கிடையே

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

23. வடமொழி நாடகத்தின் கதைப்பின்னலில் (அர்த்த பிரகிருதி) 'கார்ய' என அழைக்கப்படுவது,
    1) தலைவன் குறிக்கோளை அடைவதில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்வது
    2) நாடகப் பொருளுக்கு விதை போன்றது
    3) பலன் அடையப் பெறுதல்
    4) தனக்குப் பயனேதுமின்றி கற்பனை செய்யப்படும் வரலாறு
    5) தலைவனின் நோக்கம் நிறைவேற வேறொருவர் துணை புரிதல்

24. நாட்டிய சாஸ்திரம் கூறுகின்ற அரங்கில் நடிகர்கள் ஆற்றுகைக்குத் தயாராக நிற்கின்ற இடம்
    1) ரங்கபீடம் 2) ரங்கசீர்யம் 3) நேபத்யகிரகம்
    4) அம்பலம் 5) விகிருஸ்டம்

25. நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் ஸ்தாயி பாவங்களின் எண்ணிக்கை
    1) எட்டு 2) ஒன்பது 3) முப்பத்துமூன்று 4) நாற்பத்தொன்பது 5) நான்கு

26. கீழைத்தேய நடிப்பு முறைகளில் முதன்மை பெறுவது,
    1) வார்த்தைகள் 2) வேடமுகம் 3) உடல்மொழி
    4) முத்திரைகள் 5) ஆடை அணிகள்

27. சமஸ்கிருத அரங்கில் 'காட்டக்கூடாத' அம்சமாகக் கருதப்படுவது,
    1) கத்திச் சண்டை 2) காதலைவெளிப்படுத்தும் உரையாடல்
    3) விலங்கு உருவங்கள் 4) தவமியற்றுதல்
    5) உணவு உட்கொள்ளுதல்

28. 'ஸ்வப்ன வாசவதத்த' என்ற வடமொழி நாடகத்தின் ஆசிரியர்
    1) காளிதாசர் 2) பாசர் 3) சூத்ரகர்
    4) ஸ்ரீஹர்சர் 5) பவபூதி

29. 'அபிக்ஞான சாகுந்தலம்' நாடகத்தில் விஞ்சி நிற்கின்ற பிரதான ரஸம்
    1) சோகம் 2.) ரௌத்திரம் 3) அச்சம் 4) அற்புதம் 5) சிருங்காரம்

30. உரோம சாம்ராஜ்ஜியத்தில் 'ஊமம்' வடிவத்தினை வளர்த்தெடுத்தவராக கருதப்படுபவர்.
    1) செனேகா 2) யூபோலிஸ் 3) ஏரியன்
    4) ஒகஸ்டஸ் 5) பிளேட்டஸ்

31. "சடங்கு என்பது உழைப்புப்போக்கில் இருந்து வேறுபட்ட நடைமுறை" என்ற கருத்தினை முன் வைத்தவர்.
    1) பக்தவத்சல பாரதி 2) பேரா.கா.சிவத்தம்பி 3) ஜோர்ஜ் தொம்சன்
    4) நெல்சன் குட்மன் 5) சி. மௌனகுரு

32. மத்திய கால ஐரோப்பாவில் நாடகத் தோற்றத்திற்கு காரணமாக அமைந்த சமயச் சடங்கு
    1) சம்போசா சடங்கு 2) திருப்பலிச் சடங்கு 3) டயோனீசியஸ் சடங்கு
    4) லெனே விழாச் சடங்கு 5) அபிடாஸ் சடங்கு



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

33. றிச்சாட் செக்னர் தனது 'சூழலியல் அரங்கில்' பயன்படுத்திய சடங்கு
1) சூரன்போர் 2) மகாபாரதம் 3) பாலித்தீவு மக்களின் சடங்கு
4) பூர்சுவா மக்களின் சடங்கு 5) ராம்லீலா சடங்கு


34. பின்வரும் 'கூத்துக்களில்' சோழர் காலத்தில் நிகழ்த்தப்படாத கூத்து,
1) வரிக்கூத்து 2) ஆரியக் கூத்து 3) சாக்கைக் கூத்து
4) தமிழ்க் கூத்து 5) சாந்திக்கூத்து

35. சிலப்பதிகாரத்தில் மாதவி நிகழ்த்திய ஆடல்களில் இடம்பெறாத கடவுளர்கள்
1) சிவன், முருகன் 2) சிவன், விஷ்ணு 3) காமன், இந்திரன்
4) கொற்றவை, மாயோன் 5) திரௌபதி, கண்ணகி

36. மன்னார்க் கூத்துக்களில் பயன்படுத்தப்படுகின்ற 'புலசந்தோர்' என்னும் பாத்திரத்தின் பணியாக அமைவது,
1) அரச வரவைக் கூறுவது 2) கதைச் சுருக்கத்தை கூறுவது
3) அரச பாத்திரத்திற்கு ஏவல் செய்வது 4) பிற்பாட்டுப்பாடுவது
5) நகைச் சுவையை வழங்குவது

37. கோவலன் கூத்து மரபில் சிறப்பான 'ஆடல் கோலங்களுடன் வெளிப்படும் பாத்திரம்'
1) பாண்டிய மன்னன் 2) மாதவி 3) சோழ மன்னன்
4) கோவலன் 5) வஞ்சிப்பத்தன்

38. இப்படத்திலுள்ள நாடக ஆசிரியரின் 'பா' நாடகம்



1) கோடை
2) வேதாளம் சொன்ன கதை
3) புதியதொரு வீடு
4) கடூழியம்
5) காலம் சிவக்கிறது

39. இந்நாடக ஆசிரியர் முன்வைத்த அரங்க சிந்தனை



1) அந்நியமாதல் அரங்கு
2) வறுமை அரங்கு
3) அபத்த அரங்கு
4) காவிய அரங்கு
5) குரூர அரங்கு

40. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நாடக வடிவம் பயிலப்படும் நாடு



1) இங்கிலாந்து
2) சீனா
3) ஜப்பான்
4) இலங்கை
5) இந்தியா



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - II

- **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

### பிரிவு A

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

1. i) நாடகக் கலையின் தனித்துவமான பண்புகளை எடுத்துரைக்க?
   ii) நாடகக் கலையின் முழுமையில் துணைக் கலைகளின் பங்களிப்பினை சுருக்கமாக விளக்குக.
   iii) 'தொழில் நுட்பம்' நாடகக் கலையின் மேம்பாட்டிற்கு உதவுமாற்றை விபரிக்குக?

(3x5 = 15 புள்ளிகள்)

2. i) நாடகத்தில் நடிப்பின் முக்கியத்துவத்தினை விபரிக்குக.
   ii) நடிப்புச் செயற்பாட்டிற்கு ஸ்னிஸ்லவஸ்கி முன் வைத்த வழிமுறையை விளக்குக.
   iii) யதார்த்த பூர்வமான நாடகமொன்றில் நடித்த உமது நடிப்பனுவத்தினை விபரிக்குக.

(3x5 = 15 புள்ளிகள்)

3. i) நீர் பார்த்த சடங்கு ஒன்றின் நிகழ்த்துகையை விபரிக்குக?
   ii) அச்சடங்கின் நிகழ்த்துகையில் சமூகவியல், மானிடவியல் பண்புகளின் செல்வாக்கினை இனங்கண்டு விளக்குக?
   iii) அச் செல்வாக்குகளை நவீன நாடகத்திற்குப் பயன்படுத்திய அரங்கவியலாளர் ஒருவரின் செயல்முறையை விபரிக்குக.

### பிரிவு B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

4. அரங்க வெளியின் 'பௌதீகத் தன்மை', ஆற்றுவோர் - பார்ப்போர் உறவில் ஏற்படுத்தும் தாக்கத்தினை 'படச்சட்ட அரங்கினையும்' 'தெருவெளி அரங்கினையும்' அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

(15 புள்ளிகள்)

5. அரிஸ்ரோட்டில் கூறும் 'கதாசிஸ் வெளிப்பாடும்' பரதர் கூறும் 'ரஸ' வெளிப்பாடும் 'பார்ப்போரின் ஈடுபாட்டில்' ஏற்படுத்தும் தாக்கத்தினை விரிவாக விபரிக்குக?

(15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?
   i) ஹென்றிக் இப்சன்
   ii) அகஸ்தோ போவால்
   iii) பம்மல் சம்மந்த முதலியார்
   iv) அ.தாசீசியஸ்
   v) பேராசிரியர் சு. வித்தியானந்தன்

(5 x 3 = 15புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் II<br>Drama & Theater II | Three Hours<br>Gr -13 (2021) | 58 | T | II |

## பகுதி – I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

1. கலையிலிருந்து கைவினை வேறுபடுவதற்கான அடிப்படை வேறுபாடு.
   1) மனித திறனின் வெளிப்பாடு 2) அழகுடன் காணப்படுதல்
   3) மீள்படைப்பு செய்யப்பட முடியாமை 4) பிறிதொரு பொருளை மூலகமாக பயன்படுத்துதல்
   5) கற்பனை பயன்படுத்தப்படுதல்.

2. பின்வருவனவற்றில் 'வரைகலை'யாக கொள்ளப்படக் கூடியது.
   1) இசை 2) சிற்பம் 3) நடனம் 4) ஓவியம் 5) கட்டடம்

3. நாடகமொன்றின் அரங்கியல் கூறுகளில் இலக்கியத்துடன் தொடர்புபடுவது.
   1) நடிப்பு 2) காட்சி விதானிப்பு 3) இசை 4) நாடக பாடம் 5) ஒப்பனை

4. கிரேக்க 'ரஜடியை' யதார்த்தபூர்வமானதாக மாற்றியவர்.
   1) சோபோகிளிஸ் 2) ஈஸ்கலஸ் 3) அரிஸ்ரோபென்ஸ்
   4) மெனான்டர் 5) யூரிப்பிடீஸ்

5. கிரேக்க அரங்கில் "பரடோஸ்" எனக் குறிப்பிடப்படும் பகுதி.
   1) ஆடுகளத்தின் முன் பகுதி 2) பார்ப்போர் அமரும் பகுதி
   3) பார்ப்போர் கூட நிலப்பகுதி 4) ஸ்கெனேயின் இரு அந்தங்களுக்கும் இடைப்பகுதி
   5) ஆடுகளத்தின் வெளிப்பகுதி

6. 'பலே' நடனம் இத்தாலியில் தோற்றம் பெற்ற காலம்.
   1) இருபதாம் நூற்றாண்டு 2) பதினாறாம் நூற்றாண்டு 3) பதினெட்டாம் நூற்றாண்டு
   4) பதினைந்தாம் நூற்றாண்டு 5) பத்தொன்பதாம் நூற்றாண்டு

7. நடிகர் ஒருவர் தனது உரையை தனக்குத்தானே பேசுவது எவ்வாறு அழைக்கப்படும்.
   1) புறச்சொல் 2) தனிமொழி 4) தன்னுரை
   4) ஆகாயக் கிளர்த்தல் 5) அசரீரி

8. பின்வருவோரில் ஈழத்தின் பிரபல வில்லிசைக் கலைஞராக திகழ்ந்தவர்.
   1) வீரமணி ஐயர் 2) பத்மநாதன் 3) சின்னமணி
   4) கண்ணன் 5) எஸ்.ரி.அரசு

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

9. “மகிழ்நெறி என்பது ஒரு தேசிய இனத்தின் மடமைகளையும் குறைபாடுகளையும் பேசுகின்ற சித்திரம்” எனக் கூறியவர்.
1) நெல்சன் குட்மன் 2) விற்றூவியஸ் 3) வோல்டயர்
4) பொலைக்ஸ் 5) அரிஸ்ரோட்டில்

10. பின்வருவனவற்றில் சோபோகிளிஸ் எழுதிய ‘சற்றயர்’ நாடகம்.
1) அஜாக்ஸ் (Ajax) 2) ரக்கினே (Trackiniae) 3) எலெக்ரா (Electra)
4) த சோபோறி (The choephori) 5) ரைக்காஸ் (Trackars)

11. கிரேக்க அரங்க மரபில் முதன் முதலாக ‘முக்கூட்டு’ நாடக முறையில் நாடகங்களைப் படைத்தவர்.
1) ஈஸ்கலஸ் 2) சோபோகிளிஸ் 3) தெஸ்பிஸ்
4) யூரிப்பிடிஸ் 5) மெனான்டர்

12. பின்வருவோரில் ‘ஐரோப்பிய மனோரதியவாதத்தோடு’ தொடர்பற்ற நாடக ஆசிரியர்.
1) அலெக்சாண்டர் டுமாக்ஸ் 2) ஷில்லர் 3) கதே
4) ஜெனே 5) லெங்கின்

13. ஐரோப்பாவில் ‘படச்சட்ட அரங்கின்’ எல்லைகளை உடைத்து நாடகங்களை நெறிப்படுத்திய நெறியாளர்கள்.
1) ஸ்ரனிஸ்லவஸ்கி, குறொட்டோவ்ஸ்கி 2) மேயர்ஹோல்ட், பெற்ரோல்ட் பிரக்ட்
3) யூஜின் அயனெஸ்கோ, பீற்ரர் புறூக் 4) மேயஹோல்ட், அன்ரோ அன்ரோயின்
5) மெனிங்சன் பிரபு, ஸ்ரனிஸ்லவஸ்கி

14. சமஸ்கிருத அரங்க வடிவத்தின் மாதிரியாகக் கொள்ளக்கூடிய ‘கூத்தம்பலம்’ தற்போதும் காணப்படும் கோவில்.
1) வடக்கு நாதர் கோவில் 2) தஞ்சைப் பெருங்கோவில் 3) மீனாட்சியம்மன் கோவில்
4) மதுரை சனிஸ்வரன் கோவில் 5) திருக்கேதீஸ்வரக் கோவில்

15. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகத்தினை முதன் முதலாக நெறிப்படுத்தியவர்.
1) குழந்தை ம.சண்முகலிங்கம் 2) க.சிதம்பரநாதன் 3) அ.பிரான்சீஸ் ஜெனம்
4) அ.தாசீசியஸ் 5) சிவயோகன்

16. சிங்கள மக்கள் மத்தியில் ‘குழந்தைவரம் வேண்டியும், சுகப்பிரசவம் வேண்டியும் செய்யப்படுகின்ற நாடகப்பண்புடை ‘சடங்கு’.
1) தொவில் 2) சன்னியக்கும் 3) ரட்டயக்கும
4) சொக்கரி 5) கவி

17. பின்வருவோரில் ‘நடிகர்களையே’ தமது அரங்கின் பிரதான மூலகங்களாகக் கொண்டு அரங்கப் பரீட்சார்த்தங்களை மேற்கொண்டவர்கள்
1) ஸ்ரனிஸ்லவஸ்கி, பிரக்ட் 2) மேயஹோல்ட், பிரக்ட் 3) பீற்றர்புறூக், அன்ரோயின்
4) குறொட்டோவ்ஸ்கி, செக்னர் 5) ஸ்ரனிஸ்லவஸ்கி, குறொட்டோவ்ஸ்கி



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

18. அரங்கில் பார்ப்போரும் பங்குகொள்ளும் வகையில் நாடகங்களை உருவாக்கிய நெறியாளர்.
    1) அகஸ்தோ போவால் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) அன்ரோனின் ஆர்த்தோ
    4) பீற்றர்புறூக் 5) மெனிங்சன் பிரவு

19. உலகப் புகழ்பெற்ற ‘அபத்த’ நாடகமாக கொள்ளப்படுவது.
    1) அபசுரம் 2) முப்பது செக்கனில் மூச்சு 3) வெண்கட்டி வட்டம்
    4) கலிலியோ 5) கொடோவுக்காக காத்திருத்தல்

20. பின்வரும் கிரேக்க நாடகங்களில் “இடிப்பஸ் கதைப்புராணத்துடன்” தொடர்புபடாத கதையைக் கொண்ட நாடகம்.
    1) அன்ரிக்கனி 2) இடிப்பஸ் மன்னன் 3) தீபிசுக்கு எதிரான எழுவர்
    4) அற்கொலனசில் இடிப்பஸ் 5) ரோஜன் பெண்கள்

21. உலக நாடக வரலாற்றில் முதல் நெறியாளராகக் கொள்ளப்படுபவர்.
    1) ஸ்ரனிஸ்லவஸ்கி 2) வில்லியம் ஷேக்ஸ்பியர் 3) மனிங்சன் பிரபு
    4) தெஸ்பிஸ் 5) அன்ரோ அன்ரோயின்

22. தமிழ் நாட்டில் ‘களவேள்வி’ ‘வெறியாட்டு’ போன்ற சடங்காற்றுகைகள் இடம் பெற்ற காலம்.
    1) கி.பி 600க்கு முன் 2) கி.பி 600 – 1300 3) கி.பி 1300 – 1800
    4) கி.பி 1800 – 1947 5) கி.பி 1947 க்குப் பின்

23. பின்வருவனவற்றில் ‘நாயக்க மன்னர் காலத்தில்’ இடம்பெறாத அரங்க அளிக்கை.
    1) பள்ளு 2) நொண்டி 3) இசை நாடகம்
    4) குறவஞ்சி 5) கீர்த்தனை நாடகம்

24. தமிழ் நாட்டில் உரைநடை நாடகங்களை, பெருங்காட்சிகளோடும் காட்சிச் ஜோடனைகளுடனும், கவர்ச்சிகரமான அரங்க அளிக்கைகளாக அரங்கேற்றும் போக்கிற்கு வித்திட்ட நாடக கலைஞர்.
    1) சங்கரதாஸ் சுவாமிகள் 2) பம்மல் சம்மந்த முதலியார் 3) அண்ணாத்துரை
    4) நவாப் ராஜமாணிக்கம் 5) எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ்

25. ஈழத்தில் இருந்து தமிழ்நாட்டுக்குச் சென்று நவீன நாடகத்துறையில், பேசப்படும் கலைஞராக திகழ்ந்தவர்.
    1) குழந்தை ம.சண்முகலிங்கம் 2) கிருஷ்ணாள்வார் 3) அ.தாசீசியஸ்
    4) க.பாலேந்திரா 5) இளைய பத்மநாதன்

26. பின்வரும் கூத்துக்களில் யாழ்ப்பாண தென்மோடிகூத்து மரபு சாராத கூத்து.
    1) எஸ்தாக்கியார் நாடகம் 2) தர்மபுத்திரன் நாடகம் 3) சங்கிலியன் நாடகம்
    4) தேவசகாயம்பிள்ளை நாடகம் 5) ஞானசௌந்தரி நாடகம்

27. “தேவலோகம் விட்டுமல்லோ தேவேந்திரன் வருகிறாரே……” என்ற காமன்கூத்தில் வருகின்ற பாடலோடு தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் மிகவும் பொருத்தமான கூத்து.
    1) மன்மதன் பாத்திர வரவு கூறப்படுகின்றது.
    2) இந்திரனின் வருகையை சபையோர் படர்க்கையில் பாடுகின்றனர்.
    3) கட்டியகாரன் தேவேந்திரனை அறிமுகம் செய்து பாடும் பாடல்.
    4) இந்திரன் பாத்திரம் தனது வருகையை ‘தன்மையில்’ பாடுவது.
    5) சிவபெருமான் பாத்திரவரபு சபையோரால் பாடப்படுகிறது.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

28. “இடிப்பஸ் மன்னன்” நாடகம் எழுதப்பட்ட காலத்தில் அதில் பாத்திரமேற்ற நடிகர்களின் எண்ணிக்கை.
1) 04 2) 14 3) 05 4) 03 5) 27

29. மேல்வரும் கூற்றுக்களை அவதானித்துப் பதில் அளிக்குக.
A – மனிதா நீ இன்னமும் உனது வார்த்தைகளைப் புதிர்களுக்குள் பொதிந்து வைத்திருக்க வேண்டுமா
B – புதிர்களை விடுவிக்கும் ஆற்றலில் புகழ்பெற்றவன் அல்லவா நீ
C – எனக்குப் பெருமை தரும் கொடையைக் கொண்டு என்னை நீ பழித்துரைக்கிறாய்.

‘இடிப்பஸ் மன்னன்’ நாடகத்தில் வரும் மேற்படி உரையாடல்களை பேசும் A. B பாத்திரங்கள் முறையே.
1) இடிப்பஸ் - கிரையோன் 2) ட்டைரீரியஸ் - இடிப்பஸ் 3) குருவானவர் - இடிப்பஸ்
4) இடிப்பஸ் - ட்டைரீரியஸ் 5) இடிப்பஸ் - இடையன்

30. “பள்ளிவிட்டால் அந்தப்பயல் நேரரே இங்கூரில் உள்ளதுகள் போல் எங்கே ஓடி வருகிறான்” என்ற கோடை நாடகத்தில் ‘செல்லம்’ பாத்திரம் பேசுகின்ற உரையாடல்.
1) சாதாரண உரையாடல் 2) தன்னுரை 3) தனிமொழி
4) புறச்சொல் 5) ஆகாய கிளர்த்தல்

31. பின்வரும் பாத்திரங்களுள் கோடை நாடகத்துடன் தொடர்புபடாத பாத்திரம்.
1) சோமு 2) கணேசு 3) முத்து
4) பஞ்சையர் 5) புண்ணியர்

32. “என்கு இப்பரீட்சை தன்னை ஏன்வைத்தாய் இறைவா நீதான்” என்ற ‘இராவணேசன்’ நாடகப்பாடலோடு தொடர்புடைய பாத்திரம்.
1) மண்டோதரி 2) இராமன் 3) இராவணன்
4) கும்பகர்ணன் 5) இந்தரஜித்தன்

33. ‘லியர் மன்னன்’ நாடகத்தில் இரட்டைக் கதைப்பின்னல் காணப்படுகின்றது என்பர். இரட்டை கதைப்பின்னலுக்கும் உரியவர்கள்.
1) லியர்மன்னன் - கிளெஸ்டர்பிரபு 2) லியர்மன்னன் - பெண்பிள்ளைகள்
3) கிளெஸ்டர்பிரபு - ஆண்பிள்ளைகள் 4) லியர்மன்னன் - கார்டிலியா
5) கிளெஸ்டர் - எட்மண்ட்

34. சீன ஒப்பேரா நாடக மரபில் வகைமாதிரிபாத்திரமாகிய கோமாளிப்பாத்திரம் பின்வருமாறு அழைக்கப்படும்.
1) செங் (Sheng) 2) ஜிங் (Jig) 3) சௌ (Chou)
4) டான் (Dan) 5) சிச்சுவான் (Sichuvan)

35. ஈழத்தில் மேடையேற்றப்பட்ட பின்வரும் நாடகங்களில் ‘வர்க்க முரண்பாட்டோடு’ தொடர்புபடாத நாடகம்.
1) சங்காரம் 2) கந்தன் கருணை 3) கடுழியம்
4) புதியதொரு வீடு 5) மானிடமென்பது புல்லோ



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

36. "இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கு" என்னும் நூலை எழுதியவர்.
    1) காரை.செ.சுந்தரம்பிள்ளை 2) சி.மௌனகுரு 3) க.சொக்கலிங்கம்
    4) இ.சிவானந்தன் 5) கா.சிவத்தம்பி

37. இப்பாடத்தில் காட்டப்பட்டுள்ள நாடக ஆசிரியர் எந்த நாட்டுக்குரியவர்.



    1) நோர்வே
    2) இங்கிலாந்து
    3) பிரான்ஸ்
    4) இத்தாலி
    5) போலந்து

38. நாடகக்காட்சி அடங்கிய இப்பூச்சாடி ஓவியம் எந்த நாட்டுக்குரியது.



    1) கிரேக்கம்
    2) உரோம்
    3) சீனா
    4) இத்தாலி
    5) இந்தியா

39. படத்தில் காட்டப்பட்ட வேடமுகம் குறிக்கும் நாடகமரபு.



    1) கிரேக்க ரஜடி
    2) சீன ஒப்பேரா
    3) யப்பானிய கபுகி
    4) உரோமைய கொமடி
    5) இலங்கை கோலம்

40. இப்படத்தில் உள்ள நாடக ஆசிரியர் பிரபல்யம் பெற்றிருந்த நாடக வகை.



    1) கூத்துக்கள்
    2) இசை நாடகம்
    3) உரைநடை நாடகம்
    4) சிறுவர் நாடகம்
    5) நடன நாடகம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி - II

❖ **உப பகுதி A இல் இருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக?**

### உப பகுதி – A

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக)**

1. i) சோபோகிளிஸ் எழுதிய 'இடிப்பஸ் மன்னன் ' நாடகத்தில் அரங்கிற்குப் புறத்தே நடைபெறும் செயல்களாக கொள்ளத்தக்க 5 செயல்களைத் தருக. (5 புள்ளிகள்)

   ii) இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் 'இடிப்பஸ்' 'விதியினால் துரத்தப்படும் நாயகனாக வர்ணிக்கப்படுகின்றான் என்பர்' நாடக பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு அக்கூற்றை விளக்குக? (10 புள்ளிகள்)

2. i) ஈழத்தமிழ் மரபுவழிக்கூத்துக்களின் அடிப்படையான பண்புகளை விபரிக்குக? (5 புள்ளிகள்)

   ii) பேராசிரியர் சி.மௌனகுரு எழுதிய 'இராவணேசன்' நாடகத்தில் காணப்படுகின்ற கூத்தின் அடிப்படைப்பண்புகளையும், நவீன நுட்பங்களையும் உதாரணங்கள் மூலம் இனங்காட்டுக? (10 புள்ளிகள்)

3. i) 'லியர்மன்னன்' நாடகபாடத்தில் வருகின்ற முக்கியமான நாடகச் செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

   ii) அந்நாடகத்தில் மோதுகையை வளர்ப்பதிலும், அவல முடிவினை தோற்றுவிப்பதிலும் அச்செயல்கள் ஏற்படுத்திய தாக்கத்தினை விபரிக்குக? (10 புள்ளிகள்)

agaram.lk

### பிரிவு B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக)**

4. ஏகாதிபத்திய ஆட்சி பாரம்பரியமான சமூகத்தின் பல்வேறு வாழ்வு நிலைகளிலும் தாக்கம் செலுத்தியது என்ற கருத்தினை மகாகவியின் கோடை நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

   (15 புள்ளிகள்)

5. 'அரசியல் சமூக பொருளாதார நிலமைகள் அரங்கில் செல்வாக்குச் செலுத்தும்' என்பார்கள் 1970க்குப் பின்னான ஈழத்தமிழ் அரங்கவரலாற்றுப் பின்புலத்தில் மேற்குறிப்பிட்ட கருத்து நிலையின் செல்வாக்கினை ஆராய்க?

   (15 புள்ளிகள்)

6. மேல்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்குச் சிறு குறிப்பு எழுதுக.
   1) பள்ளு
   2) விலாசம்
   3) சொக்கரி
   4) வாசாப்பு
   5) மகிடி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!